# முகவுரை

தொழில் திணைக்களத்தில் புதிய தொழில் ஆணையாளர் அதிபதியாக 2011 ஆம் ஆண்டில் பொறுப்புக்களை ஏற்றதன் பின்னர், திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் மற்றும் பிரதேச அலுவலகங்களினூடாக பணியாளர் மற்றும் தொழில்தருநர் சமூகத்திற்கு ஆற்றப்பட்ட சேவையை மேலும் ஒழுங்கமைப்பதும், பயனுறுதிவாய்ந்ததாக ஆக்குவதுமே எனது பிரதான எண்ணமாக இருந்தது. இந்த விடயத்தில் அவதானம் செலுத்தப்பட்ட பிரதான செயற்பாடு, தொழில் பரிசோதனைகள், நிறுவனம்சார் கூட்டுறவினை விருத்தி செய்தல் மற்றும் தொழிற்றுறை அமைதியைத் தாபித்தல் என்பவற்றினூடாக சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களினால் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாகும்.

இந்நோக்கத்திற்காக, 39 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியல் அலுவலகங்களினால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பரிசோதனையின் தரத்தை மதிப்பிடுவதற்கும், மாகாணத்திலுள்ள ஏனைய அலுவலகங்களுடன் தமது முன்னேற்றத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு அலுவலர்களை இயலச்செய்யும் நோக்கிலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. ஆய்வாண்டு காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையான பரிசோதனைகளை நடத்தியதன் மூலம் களச் செயற்பாடுகளை கிரமமாக மேற்பார்வை செய்வது சாத்தியமாகியிருந்தது. அத்துடன் பிரதேச அலுவலகங்களின் தேவைப்பாடுகளை இனங்காண முடிந்ததுடன், அதற்கான தீர்வுகளையும் வழங்க முடிந்திருந்தது.

வேதன வேறுபாட்டின் அடிப்படையில் தொழில் அலுவலர்களின் தொழிற் சங்கச் செயற்பாடுகள் காரணமாக ஆண்டின் இறுதிப் பகுதியில் தொழில் பரிசோதனை செயன்முறையில் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரச்சனைகளை கலந்துரையாடல் மூலம் தீர்க்கமுடிந்ததுடன், நீதிமன்ற வேலைகளைத் தடங்கலின்றி தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஓட்டுமொத்தத்தில், 2011 ஆம் ஆண்டு புதியதொரு ஆண்டாகத் தோன்றுகின்றது. திட்டமிட்ட செயற்பாடுகளை மேம்படுத்துவதில் திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகளினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பினை நான் பாராட்டுகின்றேன்.தொழில், தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் சர்வதேச தொழில் தாபனத்தின் வதிவிடப் பிரதிநிதி நல்கியிருந்த பங்களிப்பினையும் நான் நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

தொழில் திணைக்களம் — வி.பி.பீ.கே.வீரசிங்க

தொழில் செயலகம் — **தொழில் ஆணையாளர் அதிபதி**

# பொருளடக்கம்


| | **பக்கம்** |
|---|---|
| 01. தொழில் திணைக்களம் | 01 - 01 |
| 02. நிறுவகக் கட்டமைப்பு | 02 - 02 |
| 03. தொழில் பரிசோதனைகள் | 03 - 03 |
| 04. கைத்தொழில் தொடர்புகள் பிரிவு | 04 - 05 |
| 05. தொழில் தரப் பிரிவு | 06 - 06 |
| 06. சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவு | 07 - 07 |
| 07. பெண்கள், சிறுவர் அலுவல்கள் பிரிவு | 08 - 09 |
| 08. விசேட புலன்விசாரணைப் பிரிவு | 10 - 10 |
| 09. ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு | 11 - 12 |
| 10. தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு | 13 - 14 |
| 11. தொழில்சார் சுகாதாரப் பிரிவு | 15 - 15 |
| 12. திட்டமிடல்,ஆராய்ச்சி,பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு | 16 - 17 |
| 13. புள்ளிவிபரப் பிரிவு | 18 - 19 |
| 14. நிதிப் பிரிவு | 20 - 20 |
| 15. நிருவாகப் பிரிவு | 21 - 23 |

# 01 தொழில் திணைக்களம்

## தொலை நோக்கு

சர்வதேசரீதியில் போட்டிப் பொருளாதாரத்திற்காக தொழிற்றுறை அமைதியைத் தாபித்துள்ள நாடொன்று.


## செயற்பணி

தொழிற்றுறை அமைதியை உறுதிப்படுத்துகின்ற சீரிய வேலைச் சூழலொன்றைத் தாபிப்பதனூடாக இலங்கையின் அபிவிருத்தி செயல்முறையினை நோக்கிப் பங்களிப்புச் செய்தல்.

## தொழில் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள்

- நாட்டில் தொழில் அமைதியைப் பேணுவதற்கு தொழில் சட்டங்களை வினைப்படுத்துவதனூடாக கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்.
- நாட்டில் தொழிற்றுறை அமைதியை உறுதிப்படுத்துவதற்கு தொழில் சட்டங்கள் தொடர்பாக உழைக்கும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் நாட்டில் சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துதல்.
- தொழிற்றுறையுடன் தொடர்புபட்ட தொழில் நியமங்களை நடைமுறைப்படுத்துதல், புதிய தொழிற்றுறைகள் தொடர்பில் மதிப்பீடுகளை நடத்துதல் மற்றும் அந்த வியாபாரங்களுக்கு சர்வதேச நியமங்களுக் கமைவாக நியமங்களை உருவாக்குதல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்துதல், அதன் நன்மைகளை உறுப்பினர்களுக்கு வழங்குதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியங்களை மேற்பார்வையிடுதல்.
- தொழிலில் இருக்கின்ற சிறுவர், பெண்கள் மற்றும் இளம் நபர்களைப் பாதுகாப்பதற்கு உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தொழிற்றுறையில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய முறைகளை அறிமுகப்படுத்துதலும், விழிப்புணர்வினை ஏற்படுத்துதலும், இதனை மேற்பார்வையிடுதலும.


# 02 நிறுவகக் கட்டமைப்பு



# 03 தொழில் பரிசோதனைகள்

சர்வதேசப் போட்டிக்கு முகம் கொடுக்கையில் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களைப் பாதுகாக்கின்ற அதேவேளையில், உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் வேலைத்தல் கூட்டுறவு மற்றும் தொழிற்றுறை அமைதி என்பன முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. தொழிற்றுறை அமைதியானது,வேலைத்தல விபத்துக்களைக் குறைத்தல், குறித்துரைக்கப்பட்ட வேதனம் மற்றும் சேவை நிலைமைகள் மற்றும் உரிய தொழில் பரிசோதனைச் செயன்முறையினூடாக ஓய்வின் பின்னரான வாழ்க்கைக்குரிய சமூகப் பாதுகாப்பை உருவாக்குதல் என்பவற்றினூடாக தொழிற்றுறை அமைதியைத் தாபிக்க முடியும். வேலைத்தலங்கள் கைத்தொழில் பிணக்குகள் மற்றும் வேலை நிறுத்தங்களைத் தடுப்பதன் மூலம் உருவாக்கப்படுகின்றன.

**2002 முதல் 2011 ஆம் ஆண்டு வரையில் செய்யப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை**




நாட்டில் செயற்படுத்தப்படுகின்ற தொழில் சட்டங்களின் கீழ் நிறைவேற்றப்பட்ட தொழில்தருநர் மற்றும் பணியாளர் ஆகிய இரு தரப்பினரிதும் கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக தொழில் பரிசோதனைச் செயன்முறை தாபிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் கீழ், 11 வலய தொழில் அலுவலகங்கள், 39 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள், 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் தொழிற்பாட்டிலுள்ளதுடன், 430 தொழில் பரிசோதகர்கள் மற்றும் 25 பொறியியலாளர்கள் களப் பரிசோதனையில் ஈடுபடுகின்றனர். தொழில் பரிசோதனைகளுக்கான அதிகாரம் இத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள், சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் வழிவந்ததாகும். பரிசோதனை நியமங்கள், சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயங்களுடன் இணைந்ததாக வடிவமைக்கப்படுகின்றன. மேலுள்ள புள்ளிவிபரம், கடந்த 10 ஆண்டு காலப் பகுதியில் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களினால் செய்யப்பட்ட பரிசோதனைகளின் விபரங்களை வெளிப்படுத்துகின்றது. தலைமை அலுவலகத்தின் பிரிவுகளினால் செய்யப்பட்ட பரிசோதனைகள் பற்றிய விபரங்கள் தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் சமர்ப்பிக்கப்படும்.

# 04 கைத்தொழில் தொடர்புகள் பிரிவு


நாட்டில் பணியாளர்களுக்கும், தொழில்தருநர்களுக்குமிடையில் சரியான உறவினைப் பேணுதல் என்ற குறிக்கோளைக் கொண்டிருக்கின்ற இந்தப் பிரிவு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

1. 1959 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்.
2. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாளர்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
3. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்.
4. 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற் சங்கக் கட்டளைச்சட்டம்.

திணைக்களத்தின் கைத்தொழில் தொடர்புகள் பிரிவு, 11 வலய தொழில் அலுவலகங்கள், 39 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்களுடன் இணைந்து கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதில் ஈடுபடுகின்றது. இதன்படி, ஆண்டின் ஆரம்பத்திலிருந்த 2695 பிணக்குகளுடன் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 3341 கைத்தொழில் பிணக்குகள் அறிவிக்கப்பட்டு பிணக்குகளின் மொத்த எண்ணிக்கை 6036 ஆக இருந்தது. 2976 பிணக்குகள் கலந்துரையாடலின் மூலம் தீர்க்கப்படுவதற்கும், 568,000,527/- ரூபா தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2002 முதல் 2011 ஆம் ஆண்டு வரையில் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதிலுள்ள முன்னேற்றம்**

| ஆண்டு | தெரிவிக்கப் பட்ட பிணக்குகள் | தீர்க்கப்பட்ட பிணக்குகள் |
|---|---|---|
| 2001 | 20,177 | 13,706 |
| 2002 | 18,760 | 14,847 |
| 2003 | 15,947 | 11,981 |
| 2004 | 12,990 | 9,798 |
| 2005 | 11,271 | 8,491 |
| 2006 | 11,273 | 8,853 |
| 2007 | 7,321 | 5,683 |
| 2008 | 7,558 | 5,469 |
| 2009 | 6,724 | 4,294 |
| 2010 | 5,640 | 2,945 |
| 2011 | 3,341 | 2,976 |




கைத்தொழில் தொடர்புகளின் சமூகக் கலந்துரையாடல் அலகினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவாக, பிணக்குகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளன. 2011 ஆம் ஆண்டுக்கான இறுதிக் காலாண்டுடன் தொடர்புபட்டிருந்த பிணக்குகள் இன்னமும் பெறப்பட்டுக்கொண்டிருப்பதனால் உரிய புள்ளிவிபரங்கள் வேறுபடக்கூடும். அதேபோன்று, கைத்தொழில் பிணக்குகள் கட்டுப்படுத்தப்பட்டமைக்கான பிறிதொரு காரணம் ஒவ்வொரு துறையிலும் தொழில் அலுவலர்களினால் ஒவ்வொரு மாதமும் செய்யப்பட்ட பரிசோதனைகளின் முறையியல் தொழில் ஆணையாளர் அதிபதியினால் கண்காணிக்கப்பட்டமையாகும்.

**<u>கூட்டு ஒப்பந்தங்கள்</u>**

2011 ஆம் அண்டு காலப்பகுதியில் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 66 ஆக இருந்ததுடன், இந்த எண்ணிக்கை முன்னைய ஆண்டு காலப்பகுதியில் 42 ஆக இருந்திருந்தது.

**<u>தொழிற் சங்கங்களைப் பதிவு செய்தல்</u>**

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தொழில் சங்கங்களின் எண்ணிக்கை 76 என்பதுடன், இரத்துச் செய்யப்பட்டவை 38 ஆகும். இதன்படி, 2011 ஆம் ஆண்டில் தொழில் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 2058 ஆகும்.

## கைத்தொழில் நீதிமன்றங்கள்

கைத்தொழில் தொடர்புகள் பிரிவிற்கு இணைக்கப்பட்ட கைத்தொழில் நீதிமன்றங்களுக்கு கட்டாய நடுத்தீர்ப்பிற்காக 59 பிணக்குகள் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், வழங்கப்பட்ட நடுத்தீர்ப்புக்களின் எண்ணிக்கை 34 ஆக இருந்தது.

## சமூகக் கலந்துரையாடலை ஊக்குவித்தல்

கைத்தொழில் தொடர்புகள் பிரிவின் கீழ் வருகின்ற சமூகக் கலந்துரையாடல் அலகு 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4638 பேரின் பங்கேற்புடன் நிறுவன மட்டத்தில் 95 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியிருந்ததுடன், பொருளாதார துறைகளினடிப்படையில் 133 நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தி, அதில் 6287 பேர் பங்குபற்றியிருந்தனர்.

மாவட்ட மற்றும் உப அலுவலகங்களினூடாக தாபன மட்டத்தில் 56 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. முதலீட்டு மேம்பாட்டு வலையம் மட்டத்தில் 18 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், 68 ஆலோசனைக் குழு அமர்வுகளும் நடத்தப்பட்டிருந்தன.

## வேலை நிறுத்தங்கள்

| | தோட்டங்கள் | | நிறுவனங்கள் | |
|---|---|---|---|---|
| | **2010** | **2011** | **2010** | **2011** |
| ஆண்டு காலப்பகுதியில் வேலை நிறுத்தங்களின் எண்ணி. | 09 | 14 | 06 | 07 |
| பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை | 3185 | 2713 | 1923 | 3742 |
| இழக்கப்பட்ட உழைப்பு நாட்களின் எண்ணிக்கை | 23037 | 9877 | 2034 | 15543 |

முன்னர் போன்றே, 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் வேலை நிறுத்தங்களுக்கான காரணங்களாக வேதனங்கள் அதிகரிக்காமை, நியமங்களைக் குறைத்தமை மற்றும் வேதனங்கள் செலுத்தப்படாமை மற்றும் தோட்டங்களிலும், ஏனைய தாபனங்களிலுமுள்ள உள் பிணக்குகளே இருந்திருந்தன.

**1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பணியாளர்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வருகின்ற செயற்பாடுகள்.**

| முறைப்பாடுகள் | விண்ணப்பங்கள் | | | |
|---|---|---|---|---|
| | **2010** | **2011** | **2010** | **2011** |
| ஆண்டின் ஆரம்பத்தில் முடிவெடுக்கப்படாதிருந்த நிலுவை | 221 | 156 | 12 | 14 |
| ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டவற்றின் எண்ணி. | 110 | 86 | 27 | 25 |
| | 331 | 242 | 39 | 39 |
| ஆண்டு காலப்பகுதியில் முடிவெடுக்கப்பட்டவற்றின் எண்ணி. | 175 | 111 | 25 | 29 |
| ஆண்டு காலப்பகுதியில் முடிவெடுக்கப்படாதிருந்த நிலுவை | 156 | 131 | 14 | 10 |

# 05 தொழில் தரப் பிரிவு

திணைக்களத்தின் தொழில் தரப் பிரிவு, தொழில் பாதுகாப்பினைப் பாதிக்கின்ற சேவை நிபந்தனைகள், நியதிகள், தனியார் துறையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளவர்களின் நலன்புரி மற்றும் பின்வருகின்ற சட்டங்களின் கீழ் சட்ட அந்தஸ்து மற்றும் மேற்பார்வையை வழங்குவதனைத் தொடர்வது தொடர்பான நியமங்களை வகுத்தமைக்கின்றது.

1. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்
2. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள், காரியாலய ஊழியர் (தொழில்,சம்பளங்கள் ஒழுங்கமைப்பு) சட்டம்.
3. 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பணியாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம்

**2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழில் தரப் பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு:**

- பதவிக் காலப்பகுதி முடிவடைந்திருந்த 14 சம்பளச் சபைகளுக்கும் மற்றும் இறந்த அல்லது சேவையிலிருந்து விலகிய 08 சம்பளச் சபைகளின் பிரதிநிதிகளுக்குப் பதிலாகவும் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.

- புதிய சம்பளச் சபைகளைத் தாபித்தலின் கீழ் தேவைப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், கமத்தொழில், மலர் ஏற்றுமதி, அழகுபடுத்தும் தாவரங்கள், மரக்கறி, பழங்கள் போன்ற வர்த்தகத்திற்கான சம்பளச் சபைகளைத் தாபிப்பது தொடர்பான கருத்துக்களைக் கோரி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதுடன், சர்வதேச பாடசாலைகள் மற்றும் கல்விசார் நிறுவனங்கள் தொடர்பான கட்டளையைத் தாபித்தல் மற்றும் தகவல்களைச் சேகரித்தல் அத்துடன் அத்தகைய தகவல்களைப் பகுத்தராய்ந்திருந்தது.

- உணவுச்சாலை, உணவு விடுதிச் சேவைகள் தொழில் தொடர்பான சேவை நிபந்தனைகளைத் தீர்மானித்தல்.

- தென்னை வளர்ப்பு தொழிலின் சம்பளங்களை 20% இனால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

- தேயிலை, இறப்பர் வளர்ப்பு கூட்டு உடன்படிக்கையை விரிவுபடுத்தல் (இது, 2011.12.01 ஆம் திகதியிலிருந்து பயனுறும் வகையில் தேயிலை வளர்ப்பு, உற்பத்தி மற்றும் இறப்பர் வளர்ப்பு, உற்பத்தி சம்பளச் சபைகளுக்குப் பிரயோகிக்கப்படும்.)

- அனுராதபுரம், எப்பாவெல, நுவரவெவ, மதவாச்சி, தலவா ஆகிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகளில் 'தயட்ட கிருள' நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக அனுரதபுரம் மாவட்டத்தில் தொழில் நியமங்களைச் செம்மைப்படுத்துவதற்காக தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஏழு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

- 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம், 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள், அலுவலக ஊழியர் சட்டம், மற்றும் 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பணியாளர்கள் வரவுசெலவுத்திட்டப் படிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணைந்தொழுகாத பணியாளர்கள், வர்த்தக தாபனங்கள் தொடர்பில் மாவட்ட தொழில் அலுவலகம், உப தொழில் அலுவலகங்கள் மாதாந்த சமகாலப் பரிசோதனையின் முன்னேற்ற புள்ளிவிபரங்களைக் கவனத்திலெடுத்து பரிசோதனைகளை நடத்துவதுடன், தொழில் தரப் பிரிவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட அத்தகைய தகவல் பகுத்தாரயப்பட்டுள்ளதுடன், அதில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஏனைய உரிய தாபனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட 20 மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களின் முன்னேற்றம் அத்தகைய அலுவலகங்களுக்கு விஜயம் செய்வதன் மூலம் பரிசீலிக்கப்பட்டதுடன், தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## 06 சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவு

சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவின் பிரதான குறிக்கோள், சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் ஏற்பாடுகளை மீறியவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் சட்ட நடவடிக்கை எடுத்து தொழில் திணைக்களத்தினால் நடை முறைப்படுத்த வேண்டிய அத்தகைய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கும், அதனூடாக வேலையாளர்களின் உரிமைகளை வலுப்படுத்துதலும், தொழில்தருநருக்கும், பணியாளர்களுக்குமிடையிலான கூட்டுறவினை விருத்தி செய்தலுமாகும்.

அத்துடன், தொழில் சட்டங்கள் மீறுகின்றவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைச் செயன்முறையில், சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அலுவலர்களினால் முகம் கொடுக்கப்பட்ட சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குதல், அவர்களது அறிவினை விருத்தி செய்தல், நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தல், தொழில் திணைக்களத்திற்கு எதிராக உயர் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படும் சந்தர்ப்பத்தில் சட்டமாஅதிபர் திணைக்களத்துடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன.

**2011 ஆம் ஆண்டில் சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் அறவிடப்படுவதற்குள்ள பண நிலுவைத் தொகைகள் பின்வருமாறு:**

| | சட்டம் | வழக்குகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 01. | பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 4,092 | 1,159,329,226.00 |
| 02. | கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 72 | 3,520,014.50 |
| 03. | தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 65 | 151,730,229.60 |
| 04. | சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 238 | 21,471,740.85 |
| 05. | கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | 80 | 9,620,306.61 |
| 06. | தொழில் நியாயாதிக்க கட்டளைகள் | 01 | - |
| 07. | பெண்கள், இளம் நபர்கள், சிறுவர் தொழில் சட்டம் | 05 | - |
| 08. | ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் | 3483 | 3,753,357,651.00 |
| 09. | தொழில் நியாயசபைக் கட்டளைகள் | 153 | 70,286,913.63 |
| 10. | பணியாளர் வரவுசெலவுத்திட்டப் படிச் சட்டம் | 54 | 2,233,870.46 |

தற்போதுவரை கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின் மீதே இது தயாரிக்கப்பட்டுள்ளமையால் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை வேறுபடக்கூடும்.

# 07 பெண்கள், சிறுவர் அலுவல்கள் பிரிவு

இந்தப் பிரிவு, சிறுவரை வேலைக்கிடுதலைத் தடுக்கும் நோக்குடன், இலங்கையில் உற்பத்திச் செயன்முறைக்கு விசேட பங்களிப்பைச் செய்கின்ற வேலையாளர்களின் உரிமைகளையும், பணியாளர்களின் காப்பு மற்றும் சேமநலனையும் பாதுகாப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

01. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவரை தொழிலுக்கமர்த்துதல் சட்டம்

02. 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம்.

03. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் பெண்கள், இளம் நபர்கள் தொடர்புபட்ட ஏற்பாடுகள்

04. 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பெண்கள், இளம் நபர்களின் தொழிற்சாலைகள் சட்டளைச் சட்டத்துடன் தொடர்புபட்ட ஏற்பாடுகள்

தொழிற் சங்கங்களின் உரிமைகள், பெண் வேலையாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரிகள் அதேபோன்று 2011 ஆம் ஆண்டில் சிறுவரை வேலையில் ஈடுபடுத்துவதை இல்லாதொழித்தல் போன்ற குறிக்கோள்களுடன் 2011 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவினால் ஆற்றப்பட்ட செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

## சமகாலப் பரிசோதனைகள்

பெண் பணியாளர்களுக்காக இந்தப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு கிரமமான பாதுகாப்பினை வழங்கி 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பிரிவு, நலன்புரி, தொழில் பாதுகாப்பு மற்றும் சேவை நிபந்தனைகளை மீறியமை போன்றவை தொடர்பான 180 சமகாலப் பரிசோதனைகளை நடத்தியுள்ளது.

## பெண் பணியாளர்களினால் செய்யப்பட்ட பொதுவான முறைப்பாடுகள் மற்றும் மகப்பேற்று நன்மைகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பரிசீலித்தல்

பெண் பணியாளர்களின் பிரச்சனை தொடர்பான முறைப்பாடுகளின் போது உரிய மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து விசாரணைகள் செய்யப்படுவதுடன், தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மகப்பேற்று நன்மைகள் செலுத்தப்படாமை மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

## பெண்கள் இரவில் தொழில் புரிதல்

தலைமை அலுவலகத்தின் பெண்கள், சிறுவர்கள் பிரிவினால் 311 பரிசோதனைகள் செய்யப்பட்டிருந்ததுடன், பெண்களை இரவில் பணிக்கமர்த்துவதற்கு மாவட்ட அலுவலகங்கள் அனுமதி வழங்குகின்றன. சுமார் 359 தாபனங்களை உள்ளடக்கி 86 நாட்களுக்கு இரவுப் பரிசோதனைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சிறுவரை வேலையில் ஈடுபடுத்துதல் பற்றிய முறைப்பாடுகளை விசாரித்தல்

சிறுவர், மகளிர் பணியகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பெயர் குறிப்பிட்டோ அல்லது அனாமதேயமாவோ பெறப்பட்ட சிறுவரை வேலையில் ஈடுபடுத்துதல் பற்றிய முறைப்பாடுகளை விசாரித்து, அத்தகைய தொழில்தருநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டமை இப் பிரிவினால் செய்யப்பட்டது. இதன்படி, இந்தப் பிரிவினால், தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்ற 237 முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன், பரிசோதனைகளின் பின்னர் 09 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

**சர்வதேச மகளீர் தினம் – 08.03.2010**

சர்வதேச மகளீர் தினத்தைக் கொண்டாடும் வைபவம் பிலியந்தலை வித்யாலோக மகா வித்தியலையத்தில் நடத்தப்பட்டது. இதற்கு இணைந்ததாக ஆனால் அலுவலக வைபவத்திற்கு முன்னராக ( மார்ச் 05) கொழும்பு மாவட்டத்தில் குறைந்த வருமானத்தையுடைய 200 பெண்களுக்கு பயிற்சி வேலைப்பட்டறை நடத்தப்பட்டது. எதிர்காலத்திலும் இந்தப் பயிற்சியை இயலச் செய்வதற்காக 200 சுய வேலைவாய்ப்பு உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தன.

**சிறுவரை வேலையில் ஈடுபடுத்துவதற்கு எதிரான சர்வதேச தினம் – 01.10.2011**

சட்டங்களுக்கான புதிய திருத்தங்களினூடாக தீங்குவிளைவிக்கும் தொழில்களாக இனங்காணப்பட்டுள்ள 51 தொழில்கள் மீதான ஒழுங்குவிதிகள் தொடர்பாக பத்திரிகை அறிவித்தல்களைப் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில்) பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக ஊடகவியலாளருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றும்,பயிலுநர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் கொழும்பு -07, ஒலிம்பிக் ஹவுஸில் நடத்தப்பட்டிருந்தன.

**உலக சிறுவர் தினக் கொண்டாட்டம் – 01.10.2011**

உலக சிறுவர் தினத்தையொட்டி 2011.10.01 ஆம் திகதி தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் சிறுவரை வேலையில் ஈடுபடுத்துவதனைத் தடுக்கும் காட்சிகளை விபரிக்கின்ற ‘‘அதுறு மிதுறு’’ தெரு நாடகம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

‘தயட்ட கிருள்ள’ கண்காட்சி 2012 இற்கு இணைந்ததாக உலக சிறுவர் தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் அனுராதபுர சுவர்ணபாலி மகா வித்தியாலத்தில் தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில், அமைச்சர்கள், அந்தப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களினது பங்கேற்புடன் இடம்பெற்றிருந்தது. சுவர்ணபாலி மகா வித்தியாலயத்தின் 200 மாணவர்களுக்கு 200 பாடசாலை உபகரணத் தொகுதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

ஆபத்தான சிறுவர் தொழில்கள் பற்றி 22 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், அனுராதபுர மாவட்டத்திலுள்ள 22 பிரதேச செயலகங்களை உள்டக்கிய பாடசாலை மாணவர்கள், பெற்றோர்களுக்கு 2011 ஒக்டோபர் 18 முதல் 21 ஆம் திகதி வரை நடத்தப்பட்டிருந்தன.

**சிறுவரை தீங்கிளைக்கின்ற தொழில்களில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கான கருத்திட்டம்**

இந்த கருத்திட்டத்தின் கீழ் சமூக அக்கறைதாரர்களுக்கான 5 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 5 மாவட்ட தொழில் அலுவலர்களை மையப்படுத்தி நடத்தப்பட்டிருந்தன. நன்னடத்தை,தொழில் மற்றும் பொலிஸ் அலுவலர்களுக்காக கொழும்பு -07, ஒலிம்பிக் ஹவுஸில் 3 ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. சிறுவர்களுக்கு தீங்கிளைக்கின்ற தொழில்கள் பற்றிய சட்டத்திற்கான 1956 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள், இளம்நபர்கள் மற்றும் சிறுவரைத் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்திற்குரிய தீங்கிளைக்கின்ற தொழில்கள் பற்றிய புதிய ஒழுங்குவிதிகளைக் கொண்டிருக்கின்ற கையேடுகளைப் பிரசுரித்து, விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**பெருந்தோட்டத்துறைப் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

மொனறாகலை, சிலாபம், கப்புத்தளை, மதுகம மற்றும் களுத்துறைப் பிரதேசங்களிலுள்ள பெருந்தோட்டங்களிலுள்ள பெண்களுக்கு தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வினையும், சமூக அறிவினையும் உருவாக்கும் நோக்கத்துடன் பெருந்தோட்டத் துறைகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்களுக்கான 15 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

**தொழிற்சாலை (பெண்) பணியாளர்களுக்கான சேவையின் போதான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

பெண்கள், சிறுவர் பிரிவு, கடைகள், அலுவலக மற்றும் தொழிற்சாலைகளிலுள்ள பெண் பணியாளர்களின் நலன்புரி,தொழில் பாதுகாப்பு மற்றும் சேவை நிபந்தனைகளை மீறுதல் தொடர்பில் 2011 ஆம் ஆண்டில் சேவையின் போதான 60 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியிருந்தது.

# 08 விசேட புலனாய்வுப் பிரிவு

இந்தப் பிரிவின் பிரதான பொறுப்புகளில், தொழிற்றுறை அமைதி செயலிழந்து செல்கின்றபோது தலையிடுதல், தேசியரீதியில் சிக்கலான கைத்தொழில் பிணக்குகளை தீர்த்தல், பிணக்குகள் பரவுவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் இந்தச் செயன்முறைகள் மீது அவதானத்தைச் செலுத்துதல் போன்றவை முதன்மையானவையாகும்.

அதிமேதகு சனாதிபதியினால், கௌரவ தொழில்,தொழில் உறவுகள் அமைச்சரினால், தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளரினால் மற்றும் தொழில் ஆணையாளர் அதிபதியினால் அனுப்பப்படுகின்ற பொது மக்களின் மனுக்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்தல், அதேபோன்று தொழில் ஆணையாளர் அதிபதியின் அங்கீகாரத்துடன் பல்தரப் பரிசோதனைகளை நடத்துதல் போன்றவை இந்தப் பிரிவின் அதிகாரத்தின் கீழ் வருகின்றன.

2011 ஆண்டுகாலப்பகுதியில் விசேட புலனாய்வுப் பிரிவினால் நடத்தப்பட்ட பரிசோனைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கான விசாரணைகளின் பெறுபேறுகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கணிக்கப்பட்ட ஊ.சே.நிதியின் நிலுவைத் தொகை | ரூபா. 153,483,322.74 |
| கணிக்கப்பட்ட நியதி வருமதியின் நிலுவைத் தொகை | ரூபா. 12,295,460.23 |

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட புலனாய்வுப் பிரிவினரால் செய்யப்பட்ட பரிசோதனைகள்.

| | 1 ஆவது காலாண்டு | 2 ஆவது காலாண்டு | 3 ஆவது காலாண்டு | 4 ஆவது காலாண்டு |
|---|---|---|---|---|
| அவசர பரிசோதனைகள் | 125 | 67 | 28 | 21 |
| துறைசார் பரிசோதனைகள் | 08 | 08 | 15 | 19 |
| கூட்டுப் பரிசோதனைகள் | 07 | 10 | 22 | 04 |
| பெரிய அளவிலான பரிசோதனைகள் | 17 | 22 | 16 | 20 |

**<u>தகவல்களை வழங்குவது தொடர்பான தொழிற்பாடுகள்</u>**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தாபனங்களுக்கான தகவல் ஏற்பாடுகளை இந்தப் பிரிவு ஒருங்கிணைக்கின்றது.

i) பாராளுமன்ற வினாக்கள்
ii) பாராளுமன்ற ஆலோசனைக் குழு
iii) பாராளுமன்ற பொதுமக்கள் மனுக் குழு
iv) நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்
v) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இதற்கு மேலதிகமாக, இந்தப் பிரிவு, பொது மக்களினால் வேண்டப்படுகின்ற தகவல் மற்றும் சேவைகளை வழங்குகின்ற திணைக்களத்தின் இணையத்தளத்தை நாளதுவரைப்படுத்துகின்றது. அதேபோன்று, அரச தகவல் நிலையத்தினால் வேண்டப்பட்ட தகவலும், அதனது இணையத்தளமும் இந்தப் பிரிவினால் வழங்கப்படுகின்றது.

# 09 ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

முக்கியமான சமூகப் பாதுகாப்பு முறையான ஊழியர் சேமலாப நிதியம், இலங்கையில் ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற தனியார் துறைப் பணியாளரின் ஓய்வு வாழ்க்கையைக் கழிப்பதற்கு சிறப்பான ஆதரவினை வழங்கும் நோக்கத்துடன், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊ.சே.நிதியச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், 1958, யூன் 01 ஆம் திகதியிலிருந்து பயனுறும் வகையில் தாபிக்கப்பட்டது. இந்நிதியத்தின் நிருவாகம், தொழில் ஆணையாளரின் கையிலுள்ளதுடன், நிதிக் கட்டுப்பாடு மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் இருக்கின்றது.

## 2011 ஆம் ஆண்டில் முடிவுற்ற ஊழியர் சேமலாப நிதியம்

| | (1959) ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிதி | 2011 ஆம் ஆண்டின் இறுதியில் |
|---|---|---|
| • ஊ.சே.நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துகின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை | 6,400 | 66,350 |
| • ஊ.சே.நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துகின்ற பணியாளர்களின் எண்ணிக்கை | 0.85 மில்லியன் | 2.3 மில்லியன் |


தற்போது நிதியத்தின் அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 13.6 மில்லியன் என்பதுடன் நிதி 1,020,072 மில்லியன் ரூபாவாகும். நிதியம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டில் (1959) நிதியத்திற்கான வருடாந்த உதவுதொகை 12 மில்லியன் ரூபா என்பதுடன், 2011 ஆம் ஆண்டு தொகை 61,870 ரூபாவாகும்.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கத்தவர்களின் சட்ட உரித்தாளிக்காக அங்கத்தவர்களினால் விண்ணப்பிக்கப்பட்ட 120,301 விண்ணப்பங்களின் அடிப்படையில் 47,311 மில்லியன் பெறுமதியான நன்மைகள் உரிய அங்கத்தவர்களுக்கு அல்லது சட்ட நன்டைகளுக்காக வங்கப்பட்டுள்ளது.

## உதவுதொகைகளைச் சேகரித்தல்

1999 – 2011 வரையான கடந்த தசாப்த காலப்பகுதியில் சட்டங்களுக்கான திருத்தங்கள் மற்றும் நிருவாக மீளாய்வு காரணமாக உதவுதொகை வருடாந்தம் விருத்திசெய்யப்பட்ட முறை.

| ஆண்டு | உதவுதொகை (ரூபா மில்.) |
|---|---|
| 2000 | 17,009 |
| 2001 | 17,934 |
| 2002 | 19,201 |
| 2003 | 20,348 |
| 2004 | 23,872 |
| 2005 | 24,324 |
| 2006 | 31,720 |
| 2007 | 40,574 |
| 2008 | 45,951 |
| 2009 | 48,712 |
| 2010 | 54,796 |
| 2011 | 61,879 |



**ஊ.சே.நிதியத்தின் செயற்பாடுகளைப் பரவலாக்குதல்**

அதிக நன்மைகளை வழங்கும் நோக்கத்துடன் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு திருத்தங்களை மேற்கொள்வதற்காக அடிப்படைச் செயற்பாடுகள் தேவைப்பட்டிருந்தன. இந்தத் திருத்தங்களின் நோக்கம், வீடமைப்பு தேவைப்பாடுகள் மற்றும் மருத்துவச் சிகிச்சைக்கு பணியாளர்களின் கணக்கிலுள்ள மீதியில் 30% இனைச் செலுத்துவதாகும்.

2011 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றம்:

| | |
|---|---|
| **நன்மைக் கொடுப்பனவுகள்** | |
| • பயனாளிகளின் எண்ணிக்கை | 120,301 |
| • செலுத்தப்பட்ட நன்மைகள் | ரூபா (மில்லியன்) 47,311 |
| **ஊ.சே.நி உதவுதொகைகளை அறவிட்டமையும், அறவீடுகளும்** | ரூபா (மில்லியன்) 61,992 |
| **ஊ.சே.நி வீடமைப்புக் கடன் கொடுப்பனவு** | |
| • அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண். | 20,041 |
| • அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் | ரூபா (மில்லியன்) 6,355 |
| **புதிய தொழில்தருநர்களின் எண்ணிக்கை** | 8,131 |
| **ஊ.சே.நி அங்கத்தவர்களின் அறிக்கைகளைக் கணினி மயப்படுத்துதல்** | |
| • தரவுகளை கணினிமயப்படுத்தியமை ('ஏ' மற்றும் 'எச்') | 496,594 |
| • ஸ்கானிங் ('ஏ' மற்றும் 'எச்) | 309,725 |

**பணத்தின் முதலீடும் வட்டியும்**

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலீடு செய்யப்பட்ட மொத்தப் பணம் 987,966 மில்லியன் ரூபாவாகும். முதலீடானது, அரச முறிகள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரிப் பிணைகள் மற்றும் கம்பனித் தொகுதிக்கடன்கள் என்பவற்றில் செய்யப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் கணக்கிற்கு 2011 ஆம் ஆண்டுக்கு 11.50% வீத வட்டியைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஊ.சே.நி உறுப்பினர்களை மீளப் பதிவு செய்வதற்கான கருத்திட்டம்**


ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களுக்கு தனித்துவ இலக்கத்தை குறித்தொதுக்குவதற்கும் பணியாளரை மையப்படுத்திய முறைமைய உருவாக்குவதற்கு செயற்படுகின்ற அங்கத்தவர்களை மீளப்பதிவு செய்வதும் நாடு முழுவதையும் உள்ளடக்கிச் செய்யப்பட்டிருந்தது. இச்செயன்முறையில் சுமார் 9.5 இலட்சம் செயற்படும் அங்கத்தவரின் கைவிரல் அடையாளம், புகைப்படம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவை இலத்திரனியல் முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாண்டு காலப்பகுதியில் மாகாண மட்டத்தில் தொழில் அலுவலர்களுக்கு 15 நடமாடும் சேவைகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

# 10 தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு

இந்தப் பிரிவின் பிரதான பொறுப்பு, தொழிற்சாலை வேலையாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சேமநலனை உறுதிப்படுத்தும் நோக்கில் 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற் சாலைகள் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகும். இந்தப் பிரிவு, கொழும்பு, கம்பஹா, குருணாகல், கண்டி, காலி, யாழ்ப்பாணம், அனுராதபுரம், இரத்தினபுரி, பதுளை, களுத்துறை ஆகிய நகரங்களில் அமைந்திருக்கின்ற 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்களினூடாக நாடளாவியரீதியில் தொழிற்படுகின்றது.

**தொழிற்சாலைகளின் பதிவு மற்றும் பரிசோதனைகளின் முன்னேற்றம்2002- 2011**




| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| No.of factories registered | 11113 | 12324 | 13879 | 14384 | 15253 | 16057 | 17002 | 18247 | 20053 | 20971 |
| No. of inspections carried out | 4420 | 4123 | 3670 | 4089 | 3916 | 3507 | 4344 | 4636 | 4482 | 4749 |

**<u>தேசிய பாதுகாப்பு விருதுகள்</u>**

இந்த விருதுகள், இரண்டு ஆண்டிற்கொருமுறை வழங்கப்படுகின்றன. விருதினை வெற்றிபெறுவோர் தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவின் பொறியியலாளர் குழாத்தினால் தெரிவு செய்யப்படுகின்றனர். இவை, பெரிய அளவு, நடுத்தர அளவு மற்றும் சிறிய அளவு என மூன்று வகைகளில் நடத்தப்படுகின்றன. தேசிய பாதுகாப்பு விருது, தொழில் பாதுகாப்பு விருது என்று இரண்டு வகையான விருதுகள் வழங்கப்படுகின்றன.

**<u>உலகப் பாதுகாப்புத் தினம் - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்</u>**

உலகப் பாதகாப்புத் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்பிரல் 28 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இந்த வருடம் "உயர் ஆபத்துள்ள இயந்திரம்" என்பதன் மீது கருத்தரங்கொன்று கொழும்பு சௌசிறிபாயவில் இடம்பெற்றிருந்தது. அத்துடன், தேசிய சுகாதார பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தின் 2 ஆம் வாரத்தில் கொண்டாடப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பிரிவின் பெறியியலாளர்கள் நாடு முழுவதிலுமுள்ள முறைசார், முறைசாரா துறைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியிருந்தனர். தேசிய மட்டத்திலான கருத்தரங்கொன்று 2011,ஒக்டோபர் 13 ஆம் திகதி இலங்கை ஆதாரமன்ற நிறுவகத்தில் நடைபெற்றிருந்தது.

## மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகம் - 2010 ஆம் ஆண்டு

| | அனுராதபுரம் | கம்பகா | கொழும்பு | கண்டி | காலி | இரத்தினபுரி | யாழ்ப்பாணம் | களுத்துறை | குருணாகல் | பதுளை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை | 1099 | 3205 | 3837 | 1968 | 3290 | 1332 | 2494 | 1256 | 1820 | 632 | 20971 |
| தொழிற்சாலைகள், ஏனையவைற்றின் பரிசோதனைகள | 217 | 495 | 1592 | 395 | 181 | 459 | 321 | 372 | 471 | 254 | 4749 |
| மரணத்தை விளைவிக்கும் விபத்துக்கள் | 06 | 14 | 12 | 04 | 04 | 05 | 03 | 05 | 02 | 07 | 60 |
| மரணத்தை விளைவிக்காத விபத்துக்கள் | 20 | 369 | 348 | 108 | 121 | 70 | - | 129 | 81 | 49 | 1313 |
| ஆபத்தான நிகழ்வுகள் | 01 | - | - | - | 02 | 01 | 02 | - | - | 01 | 07 |
| கொதி கலன்களின் பரிசோதனை | 97 | 207 | 260 | 81 | 28 | 80 | - | 250 | 244 | 69 | 1316 |
| ஆவி போக்கிகளின் பரிசோதனை | 07 | 189 | 220 | 40 | 16 | 57 | - | 19 | 58 | 13 | 619 |
| காற்றுப் போக்கிகளின் பரிசோதனை | 47 | 462 | 366 | 273 | 104 | 300 | - | 76 | 296 | 53 | 1977 |
| வாயு போக்கிகளின் பரிசோதனை | - | - | 71 | - | - | 04 | - | 47 | - | 18 | 140 |
| ஏனைய அதிக ஆபத்தான இயந்திரங்களின் பரிசோதனை | 26 | 438 | 365 | 307 | 27 | 199 | - | 34 | 252 | 76 | 1724 |
| திட்டங்களின் அங்கீகாரங்கள் | 02 | 43 | 40 | - | 01 | 01 | 16 | 14 | 02 | 03 | 122 |
| விரிவுரைகளும் கருத்தரங்குகளும் | 06 | 49 | 27 | 18 | 08 | 14 | 70 | 45 | 12 | 45 | 294 |
| நீதிமன்ற வழக்குகள் | - | 01 | 05 | 06 | - | - | - | - | 16 | - | 28 |

# 11 தொழில்சார் சுகாதாரப் பிரிவு

இந்தப் பிரிவின் நோக்கம், தொழில்சார் ஆபத்துக்கள், தொழில்சார் நோய்கள் மற்றும் வேலைத்தளங்களிலுள்ள ஏற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட அசௌகரியமான சுகாதார நிலைமை களைக் குறைத்தலாகும்.

விபத்துக்கள், ஆபத்துக்கள் அற்ற மற்றும் தொழில்சார் சுகாதாரம் சிறப்பாக பேணப்படும் சேவைச் சூழலொன்று வேலையாளர்களின் வினைத்திறன், உற்பத்தித்திறன் அதேபோன்று உற்பத்தி செய்கின்ற பொருட்களின் தரத்தின் மேம்பாடு என்பவற்றை உயர்த்தும் என்பதில் எதுவித சந்கேமுமில்லை. தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி, பணியாளரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டரீதியான தேவைப்பாடுகளாகும்.

தொழில்சார் சுகாதாரப் பிரிவு மேலேயுள்ள குறிக்கோள்களை அடையும் நோக்கில் ஒரு தொடர் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

**சூழல்சார்ந்த அளவீடுகள்**

ஆண்டு காலப்பகுதியில் செய்யப்பட்ட சூழல்சார் அளவீடுகளின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| தளத்தில் செய்யப்பட்ட அளவீடு | 1070 |
| ஆய்வுகூடத்தில் செய்யப்பட்ட அளவீடு | 220 |

**பௌதீகப் பரிசோதனைகள்**

ஆய்வாண்டு காலப்பகுதியில் செய்யப்பட்ட பௌதீகப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 790.

**காது கேட்கும் சக்தியைப் பரிசோதித்தல்**

இந்தப் பிரிவு, சீமெந்து, செரமிக், கண்ணாடி மற்றும் அனல்மின் சக்தி போன்ற அதிக சத்தங்களுடன் கூடிய வேலைத்தலங்களில் வேலையிலீடுபடுகின்ற வேலையாளர்களுக்கு காது பரிசோதனைகளை நடத்துகின்றது.

**தொழில்சார் பாதுகாப்பு மீதான விழிப்புணர்வு**

இப்பிரிவின் அலுவலர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஆட்களுக்கு குழுமங்களாக நடத்தியிருந்தனர்:

| | |
|---|---|
| - தாபனங்களின் முகாமையாளர்கள் | 690 |
| - நீதித்துறை மட்டத்திலான அலுவலர்கள் | 305 |
| - முதலீட்டு ஊக்குவிப்பு வலைய தொழிலாளர்கள் | 485 |
| - அரச சுகாதாரப் பயிற்சி அலுவலர்கள் | 35 |
| - பட்டபிற் கல்விப் பட்டதாரிகள் / தலைவர்கள் | 62 |

**ஊ.சே.நி மருத்துவ சபை**

தொழில்சார் சுகாதாரப் பிரிவின் பிரதித் தொழில் ஆணையாளரே ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பிலான தொழில் திணைக்களத்தின் மருத்துவ சபையின் தவிசாளராவார்.

ஓய்வூதிய வயதினை அடைவதற்கு முன்னர் நோயினால் அல்லது விபத்தினால் வேலை செய்வதற்கான ஆற்றலை நிரந்தரமாக இழந்த நபர்களுக்கு ஊ.சே.நிதியைச் செலுத்துவதற்கு இந்தச் சபை அங்கீகாரமளிக்கின்றது. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பன்னிரண்டு (12) மருத்துவ சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன், 600 பணியாளர்கள் பரிசோதிக்கப்பட்டிருந்தனர்.

**வேலையாளர் நட்டஈட்டை மதிப்பிடுதல்**

இந்தப் பிரிவினால் செய்யப்படுகின்ற முக்கிய தொழிற்பாடு தொழில்சார் நோய்கள் மற்றும் விபத்துக்கள் காரணமாக வேலையாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையை மதிப்பீடு செய்வதாகும். 2011 ஆம் ஆண்டில் 48 பணியாளர்கள் பரிசீலிக்கப்பட்டிருந்தனர்.

# 12 திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் செயற்பணி திணைக்களத்தின் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்காக சிறந்த அலுவலர் தொகுதியை உருவாக்குதல், தொழில் அமைதியைத் தாபிப்பதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உதவுதல், தரவுகளைத் தயாரித்தல் மற்றும் ஆய்வுகளை நடத்துதல் போன்றவையாகும். இந்தப் பிரிவு இங்குள்ள 4 துறைகளின் கீழ் தொழிற்படுகின்றது.

01. தொழில் அலுவலர்களின் பயிற்சி

02. திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி

03. முன்னேற்ற மீளாய்வு

04. வெளியீட்டு விடயங்கள்

**திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி**

சிறந்த செயற்றிட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் திணைக்களத்தின் தொலைநோக்கு, செயற்பணியை அடைவதற்கான செயற்பாடுகளுக்கு உரிய வழிகாட்டலை வழங்குவதற்காக அத்தகைய செயற்பாடுகளின் காலாண்டு நிகழ்ச்சித்திட்டங்களைப் பார்வையிடுதல் என்பன இப்பிரிவினால் ஆற்றப்படுவதுடன், இது திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகளின் தொழிற்பாடுகளை உரியமுறையில் புரிந்துகொள்வதற்கு திணைக்களத்தின் அத்தகைய பிரிவுகளுக்கு இயலச்செய்கின்றது. அதேபோன்று, திட்டமிடப்பட்ட நிலையில் மாற்றமொன்று இருக்கும்போது, சர்வதேச தொழில் தாபனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட சீரிய வேலை வழிகாட்டல்கள் தொடர்பான இலக்குகளை அடைவதற்காக தொழில், தொழில் உறவுகள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட இலக்குவைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை அடைவதற்கும் வழிகாட்டலை வழங்குகின்றது. 2011 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளுடன் 100% முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

**முன்னேற்ற மீளாய்வு**

தொழில் ஆணையாளர் அதிபதி அல்லது ஏனைய தொழில் ஆணையாளர்களினால் தலைமை தாங்கப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், அனைத்து மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்களின் தொழில் பரிசோதனைகள், தொழில் திணைக்களத்தினால் பெறப்பட்ட முறைப்பாடுகள், திணைக்களத்தின் நீதிமன்ற வழக்குகள், சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அத்துடன் ஏனைய விடயங்கள் தொடர்பாக வலய மட்டத்தில் நடத்தப்பட்டன. இச்செயன்முறையினால் திணைக்களத்தின் வேலையின் வினைத்திறனையும், விரைவினையும் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்தன்மையான 07 முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

**தொழில் கணக்காய்வு**

இந்த அலகின் அலுவலர்களினால் முன்னேற்ற அறிக்கைகள் மிகவும் ஆழமாக ஆய்வுசெய்வதற்கு இணையாக இந்த அலகின் அலுவலர்களினால் செய்யப்படுகின்ற பரிசோதனைகளில் காணப்பட்ட குறித்த பிரச்சனைக்குரிய விடயங்கள் மாவட்ட, உப தொழில் அலுவலகத்தினால் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. அத்தகைய சிக்கலான நிலைமைகளுக்குச் சரியான உத்தேசங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் அத்தகைய நிலைமைகள் மீண்டும் எழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

**வெளியீடுகள்**

தொழில் திணைக்களத்தில் பயன்படுத்துவதற்குத் தேவைப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை அச்சிடுவதில் துணையாக இருந்துள்ளது.

01. 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
02. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
03. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்

மேலேயுள்ளவற்றிற்கு மேலதிகமாக சுற்றிக்கைகள், தொழில் வழக்குகளின் தீர்மானங்கள், தொழில் பரிசோதனை கை நூல்கள் மற்றும் ஏனைய பல்வேறு ஆவணங்கள் அச்சிடப்படுகின்றன.

**<u>திணைக்களத்தின் அலுவலர்களின் பயிற்சி தொடர்பான செயற்பாடுகள்</u>**

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் வெவ்வேறு மட்டங்களிலுள்ள அலுவலர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சிச் செயற்பாடுகள் பின்வருமாறு :

| நிகழ்ச்சித்திட்டம் / விடயம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தொழில் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 16 |
| முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 |
| கணினிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 16 |
| திணைக்களத்தின் உதவித் தொழில் ஆணையாளர்களுக்கான இயலுமையை வளர்க்கும் பயிற்சிப் பட்டறை | 01 |
| தொழில் அலுவலர்களுக்கான இயலுமையை வளர்க்கும் பயிற்சிப் பட்டறை | 04 |
| மனிதவளங்கள் அபிவிருத்தி அலுவலர்களுக் கான பயிற்சித் தொழிற்பட்டறை | 01 |
| ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 02 |

இதற்கு மேலதிகமாக, திணைக்களத்தின் 26 அலுவலர்களுக்கு பட்டப்பிற்கல்வி டிப்புளோமா பாட நெறிகளுக்கும், 44 அலுவலர்களுக்கு வெளியார் தாபனங்களால் நடத்தப்பட்ட 37 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சர்வதேச தொழில் தாபனத்தின் இலங்கை முகவரின் ஒருங்கிசைவுடன் தொழில் துறையில் பாரிய சேவையை ஆற்ற முடிந்தது. அவையாவன:

- தொழில் பரிசோதனை தொடர்பில் வழிகாட்டல் கை நூல் தயாரித்தமை.
- திணைக்களத்தின் இரண்டாவது நிலை மற்றும் சிரேஷ்ட தர அலுவலர்களின் பங்கேற்புடன் சர்வதேச தொழில் சமவாயங்கள் மற்றும் தொழில் சட்டங்களை மீளாய்வது தொடர்பில் பயிற்சிப் பட்டறைகளை நடத்தியமை.
- திணைக்களத்திற்கு ஒருங்கிணைப்புத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்தமை.
- சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில் பரிசோதனைக்கான பயிற்சிக் கை நூலினைமீளாய்வு செய்தமை.

# 13 புள்ளிவிபரவியல் பிரிவு

புள்ளிவிபரவியல் பிரிவின் பிரதான தொழிற்பாடு, இலங்கையில் தொழில் துறையில் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள் தொடர்பான தகவலைச் சேகரித்து, பகுத்தாராய்ந்து வெளியிடுவதாகும். இந்த நோக்கத்திற்காக வருடாந்தம் நடத்தப்படுகின்ற இரண்டு பிரதான தபால் கணக்கெடுப்பினூடாக வேலை மணியத்தியாலங்களின் எண்ணிக்கை பற்றிய தரவு சேகரிக்கப்படுகின்றது. இந்தப் பிவினால் ஆற்றப்படுகின்ற ஏனைய தொழிற்பாடுகள் பல்வேறு நிருவாகத் தரவின் வரைவுகளைத் தயாரித்தல் மற்றும் ஆகக் குறைந்த வேதனச் சுட்டியைத் தயாரித்தல் என்பவையாகும்.

**வருடாந்த வேலைவாய்ப்புக் கணக்கெடுப்பு**

நாட்டின் நிருவாக மற்றும் திட்டமிடல் தேவைப்பாடுகளுக்கான புள்ளிவிபரத் தரவினைச் சேகரிக்கும் குறிக்கோளுடன், ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதத்தில் 5 பேரை அல்லது அதற்கும் அதிகமாகக் கொண்டிருக்கின்ற தனியார் துறை மற்றும் அரசுசார் துறை தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. தற்போது, 2010 ஆம் ஆண்டுக்கான தொழில் கணக்கெடுப்பு தயாரிப்பு நிறைவடைந்துள்ளதுடன், அச்சிடுவதற்குத் தயாரான நிலையிலிருக்கின்றது.

உலகப் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதில் இலங்கையிலுள்ள சில தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆகவே, 2009 ஆம் ஆண்டில் தனியார் துறை தொழில்வாய்ப்பு 59.3% ஆக இருந்ததுடன், இது, 2010 ஆம் ஆண்டில் 61.5% ஆக சிறிதளவு அதிகரித்திருந்தது. 2009 ஆம் ஆண்டில் அரச துறைசார் துறையில் தொழில்வாய்ப்பு 40.7% ஆக இருந்ததுடன், இது, 2010 ஆம் ஆண்டில் 38.5% ஆக குறைவடைந்திருந்தது.

**தொழில் புள்ளிவிபரம் - 2011 ஆம் ஆண்டு விடயங்களை அச்சிடலும், வெளியிடலும்**

தொழில் துறையுடன் தொடர்புபட்ட சமகால, நம்பிக்கையான தகவலை உள்ளடக்கியிருக்கின்ற 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த தொழில் புள்ளிவிபர வெளியீடு உரிய காலப்பகுதியில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது.

**பொது உழைப்பு மற்றும் வேலையாற்றியுள்ள மணித்தியாலங்களின் எண்ணிக்கைக் கணக்கெடுப்பு**

ஆண்டிற்கு இருமுறை நடத்தப்படுகின்ற இந்த கணக்கெடுப்பின் பிரதான குறிக்கோள் பணியாளரின் பொதுவான மாதாந்த உழைப்புகள் மற்றும் சம்பளச் சபைகளினால் நிறுவப்பட்ட ஆகக்குறைந்த சம்பளங்களுள்ள கைத்தொழில் தாபனங்களில் வேலையாற்றியுள்ள மணித்தியாலங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தலாகும்.

இந்த கணக்கெடுப்பு, தெரிவுசெய்யப்பட்ட தாபனங்களுக்கு தபாலில் அனுப்பப்பட்ட கேள்விக்கொத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் நடத்தப்படுகின்றது. இந்த கணக்கெடுப்பினூடாக பெறப்பட்ட தகவல், தொகை மதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கும், ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொழில் தாபனம் போன்ற அத்தகைய சர்வதேச தாபனங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. 2011 மார்ச், செப்ரெம்பர் மாதங்களில் நடத்தப்பட்ட இரண்டு கணக்கெடுப்புகளை உள்ளடக்கிய அறிக்கையைத் தொகுப்பது நிறைவடைந்துள்ளது.

இதன்படி,2000 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலான நாளாந்த உழைப்பு 121% அதிகரிப்பொன்றுடன் 211.11 ரூபாவிலிருந்து 488.68 ரூபாவாக அதிகரித்துள்ளது. நிருமாணத் துறை மற்றும் விவசாயத் துறைகளுடன் தொடர்புபட்ட தோட்டத்துறையில் முறையே 116% மற்றும் 245% அதிகரித்திருந்தது.

**துறைகளின் மூலமான நாளாந்த சராசரி உழைப்புக்கள் (ரூபா) – 2001-2010**

| துறை / ஆண்டு | விவசாயம் (தோட்டத் துறை) (ரூபா) | உற்பத்தித் துறை (ரூபா) | நிருமாணத் துறை (ரூபா) |
|---|---|---|---|
| 2000 | 104.12 | 221.11 | 285.99 |
| 2001 | 112.11 | 230.66 | 263.12 |
| 2002 | 128.72 | 273.10 | 259.63 |
| 2003 | 138.43 | 306.28 | 276.42 |
| 2004 | 152.94 | 310.84 | 335.70 |
| 2005 | 178.47 | 336.49 | 416.75 |
| 2006 | 206.33 | 356.11 | 424.55 |
| 2007 | 198.01 | 411.60 | 408.37 |
| 2008 | 298.85 | 469.47 | 443.91 |
| 2009 | 323.20 | 492.93 | 472.58 |
| 2010 | 359.45 | 488.68 | 616.61 |

**ஆகக் குறைந்த சம்பளச் சுட்டி – 2000-2011 (அடிப்படை ; 1978 = 100)**

இந்தச் சுட்டெண் மற்றும் அதற்கான சமகாலத் திருத்தங்கள் சம்பளச் சபைகளின் கீழ் தொழில் ஆணையாளர் அதிபதியினால் நிர்ணயிக்கப்படுகின்ற ஆகக்குறைந்த சம்பளங்களினடிப்படையில் மாதாந்தம் மற்றும் வருடாந்த அடிப்படையில் அறிவிக்கப்படுகின்றது.

| ஆண்டு | விவசாயம் (தோட்டத்துறை) | கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை | சேவைகள் துறை | அனைத்துத் துறைகள் |
|---|---|---|---|---|
| 2000 | 1,142.7 | 857.1 | 559.7 | 1,000.4 |
| 2001 | 1,176.4 | 919.7 | 657.6 | 1,049.2 |
| 2002 | 1,269.6 | 986.5 | 678.0 | 1,126.5 |
| 2003 | 1,382.3 | 1,009.4 | 678.0 | 1,205.3 |
| 2004 | 1,397.7 | 1,044.1 | 751.0 | 1,233.1 |
| 2005 | 1,527.4 | 1,078.4 | 779.7 | 1,329.7 |
| 2006 | 1,567.1 | 1,090.6 | 779.7 | 1,358.2 |
| 2007 | 1,821.4 | 1,522.4 | 157.0 | 1,648.7 |
| 2008 | 2,286.6 | 1,877.5 | 1,370.8 | 2,070.4 |
| 2009 | 2,349.4 | 2,053.9 | 1,545.8 | 2,171.4 |
| 2010 | 3,328.0 | 2,199.0 | 1,673.3 | 2,865.3 |
| 2011 | 3,427.22 | 2,402.08 | 1,851.80 | 2,996.09 |

மாதாந்தம் மற்றும் வருடாந்த அடிப்படையில் அறிவிக்கப்படுகின்றது.

# 14 நிதிப் பிரிவு

இந்தப் பிரிவின் பிரதான இலக்கு, திணைக்களத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடையும் நோக்கில் அரச நிதிசார் கொள்கைகள் மற்றும் நிதிசார் ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்ற சிறந்த நிதிசார் கட்டப்பாடாகும். வருடாந்த மதிப்பீடுகளினால் ஒதுக்கப்பட்ட பணங்களை உரிய பயனுறுதிவாய்ந்த முறையில் செலவுறுதல் மற்றும் தேவைகளுக்கும், உறப்படுகின்ற செலவினங்களுக்குமாக வெவ்வேறு அலுவலகங்களின் பல்வேறு கருத்திட்டங்களுக்காகத் தேவைப்பட்ட பணங்களை ஒதுக்குதல் மூலமாக திணைக்களத்தின் இலக்குகளை அடைதலாகும்.

**அகக் கணக்காய்வுப் பிரிவு**

இந்தப் பிரிவு, முகாமைத்துவ கணக்காய்வு, அரச கணக்கீட்டு நடைமுறையுடன் சுயமாக இணங்கி தொழில் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு, செயற்பாடுகளின் செயலாற்றுகையினூடாக உறுதிப்படுத்துகின்றது.

2010 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவிற்காக 982,340,000/- ரூபா தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 969,988,334/- ரூபா செலவுறப்பட்டிருந்தது. அதேபோன்று, மூலதனச் செலவாக ஒதுக்கப்பட்ட 371,936,197/- ரூபாவில் 333,261,334 /- ரூபா செலவுறப்பட்டது. இதன்படி, மூலதனச் செலவினத்தில் 89.6% மற்றும் மீண்டெழும் செலவினத்தில் 98.74% முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளது.

| விவரணம் | | 01 தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | 02 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
|---|---|---|---|---|---|
| | | 1-1 | 2-2 | 2-3 | 2-4 |
| மீண்டெழுவது | ஒதுக்கீடு | 593,210,000.00 | 59,355,000.00 | 47,595,000.00 | 282,180,000.00 |
| | செலவினம் | 592,329,924.18 | 55,336,910.66 | 46,083,438.88 | 276,238,398.13 |
| மூலதனம் | ஏற்பாடு | 78,000,000.00 | 4,333,197.00 | 3,400,000.00 | 286,203,000.00 |
| | செலவினம் | 41,503,983.00 | 3,255,804.00 | 3,127,123.00 | 285,374,424.00 |

## அகக் கணக்காய்வுப் பிரிவு

2011 ஆம் ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கமைய முன்னேற்ற மீளாய்வுகளின் செயற்பாடுகளைப் பரிசீலித்தல் உள்ளடங்கலாக திணைக்களத்தின் 52 வெவ்வேறு பிரிவுகளின் வேலைகளைப் பரிசீலிக்க வேண்டியிருக்கின்றது. அவற்றில், 27 அலுவலகங்கள் பரிசீலிக்கப்பட்டதுடன், ஒவ்வொரு பிரிவினதும் பலவீனங்கள் இனங்காணப்பட்டதுடன், அத்தகைய பலவீனங்களைச் சரிசெய்வதற்கான முன்மொழிவுகளை உள்ளடக்கியிருக்கின்ற அகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பதவியினரின் பற்றாக்குறை காரணமாக 50 அலுவலகங்களில் 27 அலுவலகங்களையே பரிசீலிக்க முடிந்தது.

# 15 நிருவாகப் பிரிவு

தொழில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த தொழிற்பாடுகளைத் தயாரித்தலும், விருத்தி செய்தலும் மற்றும் தொழில் திணைக்களத்தின் பௌதீக, மனித வளங்களின் தரத்தை மேம்படுத்துதல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

இந்தப் பிரிவின் கீழ் தொழிற்படுகின்ற 04 உப பிரிவுகள் பின்வருமாறு:

- நிருவாகக் கிளை
- தாபனக் கிளை
- கட்டடப் பராமரிப்புப் அலகு
- நூலகம் மற்றும் தகவல் பிரிவு

நிருவாகப் பிரிவின் பொறுப்புக்களை ஆக்கத்திறன்சார் விதத்தில் ஆற்றுவதன் மூலம் மாவட்ட, உப தொழில் அலுவலகங்களை மேம்படுத்துவதற்காக 2011 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகள் செய்யப்பட்டன.

| அலுவலகம் | செலவுறுப்பட்ட தொகை |
|---|---|
| கப்புத்தளை அலுவலகத்தின் படிகளுக்கு சட்டமிடப்பட்டமை | 26,178.46 |
| கண்டி வலய தொழில் அலவலகத்திற்கு பிரிப்புகளைப் பொருத்தியமை | 712,288.79 |
| அம்பாறை தொழில் அலுவலக நிருமாணம் - நிலை I | 2,282,935.48 |
| கண்டி தொழில் அலுவலகத்தில் மின்சார முறைமையை நிறுவியமையும், திருத்தியமையும் | 68,562.50 |
| களுத்துறை தொழில் அலுவலக நிருமாணம் - நிலை III | 1,517,996.48 |
| மட்டக்களப்பு தொழில் அலுவலக நிருமாணம் - நிலை I | 3,806,994.71 |
| மட்டக்களப்பு தொழில் அலுவலக நிருமாணம் - நிலை II | 2,090,111.22 |
| யாழ்ப்பாண மாகாண தொழில் அலுவலக நிருமாணம் | 11,313,885.08 |
| அனுராதபுர உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகம் திருத்தியமை | 66,738.00 |
| அனுராதபுர வலயத் தொழில் அலுவலக நிருமாணம் - நிலை II | 1,397,503.70 |
| அனுராதபுர வலயத் தொழில் அலுவலக நிருமாணம் - நிலை III | 1,004,661.74 |
| குளியாப்பிட்டி மாவட்ட தொழில் அலுவலக நிருமாணம் | 1,991,794.75 |
| கட்டுநாயக்க தங்கும் விடுதி மதில் நிருமாணம் | 318,173.30 |
| களுத்துறை மாவட்ட தொழில் அலுவலக நிருமாணம் | 2,210,465.85 |
| வட மத்தி தொழில் அலுவலக நிருமாணம் | 467,308.80 |
| மொனறாகலை களஞ்சியக் கட்டடத்தொகுதி மற்றும் பதிவேட்டு அறை நிருமாணம் - நிலை III | 850,009.66 |
| களுத்துறை தொழில் அலுவலகத்தில் பிரிப்பினை நிறுவியமை | 547,212.31 |
| களுத்துறை அலுவலகப் பிரதான நுழைவாயிலிற்கு அருகாமையில் பாதுகாப்புக்கூடம் மற்றும் கூடாரம் அமைத்தமை | 129,000.00 |

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனுராதபுர வலய தொழில் அலுவலகத்தின் நிருமாணம் நிலை II, அம்பாறை, குளியாப்பிட்டி, களுத்துறை, கப்புத்தளை மொனாறாகலை ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட தொழில் அலுவலகங்கள், கந்தளாயிலுள்ள உப தொழில் அலுவலகத்தின் நிருமாண வேலைகள் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவுசெய்யப்படவில்லை. ஒப்பந்தகாரர்களின் தவறுகள், கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியான மழை விழ்ச்சி, உரிய நேரத்தில் மூலதனப் பொருட்களை பெறுவதில் கஷ்டங்கள், மேலதிக மின்சாரத்தைப் பெறுவதற்குத் தவறியமை போன்ற அத்தகைய எதிர்பார்க்காத பிரச்சினைகளே இதற்கான காரணங்களாகும்.

**திணைக்களத்தின் பதவியினர்**

| | |
|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் மொத்தப் பதவியினர் | 2214 |
| புதிய ஆட்சேர்ப்புகள் | 159 |
| திணைக்களத்திற்கான இடமாற்றங்கள் | 25 |
| ஓய்வுபெறுதல் | (67) |
| திணைக்களத்திற்கு வெளியேயான இடமாற்றங்கள் | (14) |
| ஏனைய காரணங்களுக்காக திணைக்களத்தை விட்டு நீங்குதல் | (20) |
| ஆண்டின் இறுதியில் பதவியினர் | 2299 |

**ஆண்டு காலப்பகுதியில் புதிய ஆட்சேர்புகள் மற்றும் ஓய்வுபெறுதல்**

| | புதிய ஆட்சேர்ப்பு | ஓய்வு |
|---|---|---|
| உதவித் தொழில் ஆணையாளர் | 04 | 07 |
| தொழில் அலுவலர்கள் | - | 13 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | 140 | 37 |
| அலுவலக உதவியாளர் | - | 09 |
| அலுவலகத் தொழிலாளி | 12 | - |
| சாரதிகள் | 02 | - |
| காவற்காரர்கள் | 01 | - |
| 'கொம்ரோ' மானி தொழிற்படுத்துநர் | - | 01 |

## வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள்

| | பெயர் | பதவி நிலை | நாடு - பாடநெறி/ கருத்தரங்கு/ பயிற்சிப் பட்டறை | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 01 | செல்வி.ஆர்.என்.ஏ.ஜி. சுஜீவா | தொழில் அலுவலர் | இந்தியா - தொழிலில் பால்நிலை விடயங்கள் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 2011.03.01-2011.03.18 |
| 02 | திரு.கே.எல். கே. பெரேரா | உதவித் தொழில் ஆணையாளர் | தாய்லாந்து -தொழிற்றுறை தொடர்பு கட்புல நிகழ்வு மீதான ஆசிய பசுபிக் அறிவினைப் பகிர்தல் வலைப் பின்னல் | 2011.04.26-2011.04.28 |
| 03 | திரு.ஆர்.எல்.ஏ. சரத் குமார | தொழில் அலுவலர் | தாய்லாந்து- இராஜதந்திரம், சர்வதேச கற்கைகளில் முது கலைமாணி | 2011.09-2013.08 |
| 04 | திரு. பிரியந்த விதானபத்திரண | சட்ட அலுவலர் (பதில்) | இந்தியா - சட்டத்தை வினைப்படுத்துவதில் தகவல் தொழில் நுட்பத்திற்கான உயர் நிகழ்ச்சித்திட்டம் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 2011.10.03-2011.11.11 |
| 05 | செல்வி.பீ.பி.சி. பேமபந்து | தொழில் அலுவலர் | இந்தியா -உலகப் பொருளாதாரத்தில் தொழில்,தொழில்வாய்ப்புத் தொடர்புகள் மீது சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 2011.11.07-2011.11.25 |
| 06 | திரு.டி.பீ.கே.ஆர். வீரக்கோன் | தொழில் ஆணையாளர் | சீனா - சமூகப் பாதுகாப்பை விரிவாக்கல் மீதான ஆசிய உயர் மட்ட கருத்தரங்கு | 2011.09.14-2011.09.16 |
| 07 | திருமதி.டி.ஆர். பெரேரா | உதவித் தொழில் ஆணையாளர் | நேபாளம் -"சமூகப் பாதுகாப்பு நலன்கள் மற்றும் சேவையின் திருப்தி, தரம் மீதான தொழில்நுட்ப கருத்தரங்கு | 2011.12.19-2011.12.20 |
| 08 | திருமதி.கே.எச்.டபிள்யு. கருணாரத்ன | உதவித் தொழில் ஆணையாளர் | நேபாளம் -"சமூகப் பாதுகாப்பு நலன்கள் மற்றும் சேவையின் திருப்தி, தரம் மீதான தொழில்நுட்ப கருத்தரங்கு" | 2011.12.19-2011.12.20 |
| 09 | திரு. ஹேரத் யாபா | மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி | இந்தோனேசியா-ஆசிய நடுத்தர வருமான நாடுகளில் சமூகத் தேவைப்பாடு மீதான ஏ.டி.பி பயிற்சிப்பட்டறை | 2011.09.13 |
| 10 | திருமதி.டபிள்யு.எல்.எஸ். விஜேசுந்தர | தொழில் ஆணையாளர் | கொரியா -தொழில் ஊறு காப்புறுதி மீதான உடந்தைப் பரிசில் | 2011.11.22-2011.11.27 |
| 11 | திரு.டபிள்யு.எம். பலிபான | பிரதித் தொழில் ஆணையாளர் | கொரியா -தொழில் ஊறு காப்புறுதி மீதான உடந்தைப் பரிசில் | 2011.11.22-2011.11.27 |
| 12 | திரு.எஸ்.பீ. சூரியாராய்ச்சி | உதவித் தொழில் ஆணையாளர் | பங்களாதேஷ்-முறைசாரா துறை வேலையாளர் களை உள்ளடக்குகின்ற சமூகப் பாதுகாப்பு மீதான தெற்காசியப் பிராந்திய கருத்தரங்கு | 2011.10.18-2011.10.21 |
| 13 | திருமதி.வி.பி.பீ.கே. வீரசிங்க | தொழில் ஆணையாளர் அதிபதி | ஜெனிவா - சர்வதேச தொழில் தாபனத்தின் 100 ஆவது அமர்வு | 2011.05.30-2011.06.13 |
| 14 | திரு.கே.டி. மனோஜ் பிரியந்த | தொழில் ஆணையாளர் | ஜெனிவா - சர்வதேச தொழில் தாபனத்தின் 100 ஆவது அமர்வு | 2011.05.30-2011.06.13 |
| 15 | திரு.எம்.ஐ.ஆர்.ஏ. ஜயதிலக | உதவித் தொழில் ஆணையாளர் | ஜெனிவா - சர்வதேச தொழில் தாபனத்தின் 100 ஆவது அமர்வு | 2011.05.30-2011.06.13 |
| 16 | திரு.பீ.எஸ். பத்திரண | சிரேஷ்ட சட்ட அலோசகர் | ஜெனிவா - சர்வதேச தொழில் தாபனத்தின் 100 ஆவது அமர்வு | 2011.05.3-02011.06.-13 |
| 17 | திருமதி.வி.பி.பீ.கே. வீரசிங்க | தொழில் ஆணையாளர் அதிபதி | இத்தாலி - தொழில் நிருவாகம் , தொழில் பரிசோதனை கல்வி நிறுவகம் (ஐரிசி) | 2011.10.2-42011.11.-04 |